**கவனிக்க.**-2023.06.09 ஆந் திகதிய 2336 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2337 - 2023 ජූනි මස 16 වැනි සිකුරාදා - 2023.06.16

2337 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு யூன் மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி II - சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சட்டங்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | 42 |
| மீயுயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - | மரணசாசன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - | நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | - |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


## வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2023, யூலை மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2023, யூன் மாதம் 23 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

141 - B 082464- 353 (2023/06)

# பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள்

## பிசுக்கால் ஏல விற்பனையில் விற்பனை செய்தல்

## குடியியல் நீதிமன்ற நியாயாதிக்கத்தை செயற்படுத்தி வரும் கொழும்பில் நடாத்தப்பட்டு வரும் மேல் மாகாண வர்த்தக மேல் நீதிமன்றில்

*மேர்க்கண்டைல் இன்வெஸ்ட்மெண்ட் அன்ட் பினேன்ஸ் பீஎல்சீ , இல. 236, காலி வீதி, கொழும்பு -03,*

*வழக்காளி,*

வழக்கு இலக்கம் : CHC 10/2019MR
*நிறைவேற்றல் ஆணை இல.: 24/2022*

*எதிர்*

*1. குருப்பு ஆரச்சிகே சாலிய சுபாஷன, இல. 05, வரகாபொல வீதி, மீரிகம.*

*2. கலட்டிகொடபதிரன்னெஹெலாகே ரேணுகா ஜயந்த பதிரத்ன, இல.05, வரகாபொல வீதி, தவலப்பிட்டிய, மீரிகம.*
*தற்போது 05, வரகாபொல வீதி, மீரிகம.*

*3. தண்டெல்லகே சசித்ரா ஹங்சினி த சில்வா, 43, சுவர்ண ஜயந்தி குறுக்குத் தெரு, வலவ்வத்த, மீரிகம.*

*மேலே பெயர் குறிப்பிடப்பட்ட 3 ஆவது எதிராளிக்கு,*

*இவ்வழக்கில் 2021 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 17 ஆந் திகதி உட்புகுத்தப்பட்டுள்ள தீர்ப்பு அறிவிப்பின் பிரகாரம், பிராதின் வேண்டுகோளில் கோரப்பட்டுள்ளவாறு இவ்வழக்கின் 1 ஆவது மற்றும் 3 ஆவது எதிராளிகளுக்கு எதிராக,*
*ரூ. 380, 762. 21 தொகை பணத்தையும் 2017.11.01 ஆந் திகதி தொடக்கம் பிராதின் திகதி வரையில் அப்போது காணப்பட்ட வட்டி வீதமான 4% மாதாந்த வட்டி வீதத்திற்கமைய கணக்கிடப்பட்ட வட்டியையும், அதன் பின்னர் பிராதின் திகதி முதல் குறித்த பணத்தொகையை செலுத்தி முடிக்கும் வரையிலுமான சட்ட ரீதியான வட்டியை செலுத்துவதற்கும், ஒப்பந்தத்தின் அட்டவணையிலும் இங்கு கீழ் காணப்படும் அட்டவணையிலும் விபரிக்கப்பட்டுள்ள* KOBELCO *135-* SR *உடைய* EXCAVATOR *இயந்திரத்தை நல்ல முறையிலும் சிறந்த செயற்பாட்டு நிலையிலும் வழக்காளியிடம் வழங்குவதற்கும் , ரூபா 4, 756,922.90 தொகை பணத்தை நட்டஈடாகச் செலுத்துவதற்கும், 2017 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் பிராதின் திகதி வரையில் அப்போது காணப்பட்ட வட்டி வீதமான 4% மாதாந்த வட்டி வீதத்திற்கமைய கணக்கிடப்பட்ட வட்டியை செலுத்துவதற்கு கட்டளையிடுமாறும், அதன் பின்னர் பிராதின் திகதி முதல் குறித்த பணத் தொகையை முழுமையாக செலுத்தி முடிக்கும் வரையிலுமான சட்ட ரீதியான வட்டியை செலுத்துவதற்கும், குத்தகை முடிவுறுத்தப்பட்ட 2017 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 01 ஆந் திகதியின் பின்னர் வேறு செலவுகளுக்கான ரூபா 13, 493.00 தொகையையும், காப்புறுதித் செலவுகளுக்கான ரூபா 56, 232.54 தொகையையும், அப்பணத்தின் மீதான ஒப்பந்தத்தின் கீழ் குத்தகைக்கு வழங்குவது முடிவுறுத்தப்பட்ட 2017 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 01 ஆந் திகதி தொக்கம் பிராதின் திகதி வரையில் அப்போது காணப்பட்ட வட்டி வீதமான 4% மாதாந்த வட்டி வீதத்திற்கமைய கணக்கிடப்பட்ட வட்டியை அறவிட்டுக் கொள்வதற்கும், அதன் பின்னர் குறித்த பணத் தொகையை முழுமையாக செலுத்தி முடிக்கும் வரையில் பிராதின் திகதி முதல் சட்ட ரீதியான வட்டியை செலுத்துவதற்கும், வழக்குக் கட்டணங்கள் மற்றும் கௌரவ மன்றுக்கு தோதெனக் கருதும் இன்ன பிற கூடுதல் நலன்களையும் பெற்றுத் தருமாறும் கட்டையிட்டு தீர்ப்பு அறிவிக்கப்படுகின்றது.*

அனைத்து அறவீடுகளையும் தீர்ப்பு அறிவிப்புத் திகதியிலிருந்து 02 மாத காலத்திற்குள் அல்லது குறித்த தீர்ப்பு அறிவிப்பின் நீதிமன்றின் மூலம் விதிக்கப்படுகின்ற அதைவிட அதிக காலப்பகுதிக்குள் செலுத்துகையில் புறக்கணிக்கப்படுமாயின் இங்கு கீழ்க்காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள 3 ஆவது எதிராளிக்குச் சொந்தமான 2020 ஆம் ஆண்டு யூன் மாதம் 17 அந் திகதி பிரசித்த நொத்தாரிசு ரவிந்தன குருப்பு அவர்களினால் எழுதி அத்தாட்சிபபடுத்தப்பட்ட இலக்கம் 4218 ஐ உடைய காப்பீடொன்றாக வைக்கப்பட்டுள்ள குறித்த காணி மற்றும் அதற்குரிய ஆதனங்கள் நீதிமன்றினால் நியமிக்கப்படுகின்ற அங்கீகாரம் பெற்ற ஏலவிற்பனையாளர் ஒருவர் மூலமாக நீதிமன்றத்தினால் அனுமதி வழங்கப்பட்ட விற்பனை செய்யும் நிபந்தனையின் பேரில் பகிரங்க ஏல விற்பனையில் விற்பனை செய்யுமாறு கட்டளையிடப்படுவதாலும்,

அவ்வகையில் தீர்ப்பு அறிவிக்கப்பட்ட தீர்ப்பின் பிரகாரம் ஹஆவது மற்றும் 3ஆவது எதிராளிகளினால் செலுத்துகையானது புறக்கணிக்கப்பட்டுள்ளதால் குறித்த பணத்தொகையை அறவிட்டுக் கொடுப்பதற்கு கொழும்பு வர்த்தக நீதிமன்றத்தில் மேற்படி இலக்கத்தையுடைய வழக்கின் மூலம் எனக்கு பிறப்பிக்கப்பட்டுள்ள விற்பனை செய்யும் கட்டளையின் பிரகாரம் கீழ்க் காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணி மற்றும் அதன் மீது அமைந்துள்ள கட்டிடங்கள், மரம் செடிகொடிகள் போன்ற அனைத்தும்,

2023 ஆம் ஆண்டு யூலை மாதம் 18 ஆந் திகதி பி.ப. 1.00 மணிக்கு.

குறித்த ஆதனம் அமையப் பெற்றுள்ள மாகாணத்தின் கம்பஹா மாவட்டத்தில், மீரிகம பிரதேச செயலாளர் பிரிவில், அம்பகஹவத்த என்னும் இடத்தில் என்னால் பகிரங்க ஏல விற்பனையின் மூலம் விற்பனை செய்யப்படும் என்பதனை இத்தால் பகிரங்கமாக அறிவித்துக் கொள்கிறேன்.

ஏல விற்பனையின் போது அதிக தொகையில் விலைமனுக் கோருபவர் கொள்வனவாளர் என்பதுடன், ஏல விற்பனை முடிவடைந்தவுடன் கொள்வனவாளரினால்,

1. ஆரம்பக் கொள்வனவு விலையின் 25% வீதத் தொகையையும்,
2. மதிப்பீட்டுத் தொகையான 0.5% வீதத்தையும்,
3. ஏல விற்பனைத் தொகை மற்றும் அரசாங்கக் கட்டணங்களையும்,
4. குடியியல் நடவடிக்கை முறை சட்டக்கோவையின் 258 ஆம் பிரிவின் பிரகாரம் பிசுக்கால் கட்டணத்தையும்,
5. விற்பனை செய்வதற்கான அனைத்துக் கட்டணங்களையும்.

விற்பனை முடிவுற்றவுடன் கொள்வனவாளரினால் உரிய தொகை, பணத்தின் மூலம் எனக்கு ( ஏல விற்பனையாளர் ) செலுத்துதல் வேண்டும்.

காசோலை யொறப்பேறகப்பட்மாட்டாது. கொள்வனவ விலையில் 25% மாத்திரம் சொதுத்தப்பட்டிருப்பின் கொள்வனவு விலையில் முித்திதொகையான 75% த்தை 30 நாட்களுக்குள் கொழும்பு வர்த்தக மேல் நிதிமன்றதத்தின் மேலே இலக்கமுறைய வழக்கிற்கு வைப்புச் செய்தல் வேண்டும்.

**மேற்குறிப்பிட்ட அட்டவணை**

மேல் மாகாணத்தின், கம்பஹா மாவட்டத்தின், ஹாபிட்டிகம கோரளையில் யட்டிகஹபத்துவயில், மீரிகம பிரதேச சபை கட்டுப்பாட்டுப் பகுதியினுள் மற்றும் பிரதேச செயலகப் பிரிவில், இலக்கம் 40 சீ, திலினகம கிராம அலுவலர் பிரிவில், அம்பன என்னும் கிராமத்தில் அமைந்துள்ள அம்பகஹவத்த என்கின்ற காணிக்கு அங்கீகாரம் பெற்ற நில அளவையாளர் எம்.ஏ.ஜயபால அவர்களினால் அளந்து தயாரிக்கப்பட்ட இலக்கம் 2710 மற்றும் 2018.10.11 ஆந் திகதியுடைய நில அளவை வரைபடத்தின் பிரகாரம் காணித்துண்டு இலக்கம் 376ஏ ஐ உடைய பகுதிக்கு எல்லைகளாக: வடக்கு: காணித்துண்டு இலக்கம் 377 மற்றும் காணித்துண்டு இலக்கம் 349( வீதி) உம்; கிழக்கு: காணித்துண்டு இலக்கம் 349 மற்றும் 388 உம்; தெற்கு: காணித்துண்டு இலக்கம் 338 மற்றும் காணித்துண்டு இலக்கம் 375 உம் மற்றும் மேற்கு: காணித்துண்டு இலக்கம் 375, 379 மற்றும் 377 உம் ஆகிய எல்லைகளைக் கொண்டு அமைந்துள்ள பத்தொன்பது தசம் இரண்டு இரண்டு பேர்ச் (0ஏ.0றூ. 19.22பே.) விஸ்தீரணமுடைய காணி மற்றும் அதற்குள் அமைந்துள்ள கட்டிடங்கள், மரம்செடி கொடிகள், பழ வகைகள் ஆகிய சகலவையும் உள்ளடக்குகிறது. இக்காணியானது அத்தனகல்ல காணிப்பதிவு அலுவலகத்தில் H 353/103 எனும் இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**ஆதனத்திற்கான நுழைவு**.- மீரிகம D.S. சேனாநாயக்க கல்லூரிக்குப் பின்பக்கமாக உள்ள வீதியில் 50 மீற்றர் தூரத்தில் இடது பக்கமாகத் திரும்பி வீதியில் முன்னோக்கிச் செல்லும் போது இறுதியில் அகப்படும் இடது பக்கமாக அமைந்துள்ள காணி.

பதிவாளர்/பிரதிபிசுக்கால்
அதிகாரி.

வர்த்தக மேல் நீதிமன்றம்,
கொழும்பு 12,
2023.05.16.

06- 249

---

# மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள்

## பிசுக்கால் மூலம் பகிரங்க ஏல விற்பனை

### ஹற்றன் மாவட்ட நீதிமன்றத்தில்

கொழும்பு 01, சேர். ராசிக் பரீட் மாவத்தை, இல. 21 என்ற முகவரியில், கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ,

முறைப்பாட்டாளர்

வடிக்கு : MB/77/15
பெறுபமதி : ரூபா. 2,765,451.63
தன்மை : அடகு
கொல் நடைமுறை : பொது

எதிராக

செல்வபெருமாள் திவாஸ்கர்,
நிவ் ஆதிபராசக்தி இல்லம்,
கிறீன் லண்ட் பாம், அப்கோட்.

எதிராளி

மேகுறிப்பிடப்பட்ட வழக்கை, 2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 14 ஆந் திகதி, இந்த வழக்கில் உள்ளடக்கப்பட்ட, வழக்கு தீர்ப்பின் படி முறைப்பாட்டாளரின் பக்கமாக தீர்வுப் பிரகடனம் உள்ளடக்கப்பட்டுள்ளது.

அதன்படி, முறைப்பாட்டு மேல் முறையீட்டில் (அ) பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்ட முதலாவது வழக்குச் சகுனம் மீது (அ) மேற்குறித்த வழக்குச் சகுனம் மீது செலுத்துவதற்கு இருக்கும் முற்பணத்தையும் ரூபா 1,102, 979.00 பணத்தொகை மற்றும் அந்த முற்பணத்தின் மீது 2014, செத்தெம்பர் 24 ஆந் திகதி வரை வட்டியோடு ரூபா 386, 880.41 பணத்தொகை மற்றும் மேற்குறித்த பணத்தொகையான ரூபா 1,102,979.00 பணத்தொகையின் மீது 2014, செத்தெம்பர் 25 ஆந் திகதியில் இருந்து முழுப்பணத்தொகையை செலுத்துவதோடு, வருடத்திற்கு 16% மேலதிக வட்டியோடு, எதிராளியின் மூலம் முறைப்பாட்டாளருக்குச் செலுத்த வேண்டுமென தீர்வுப்பிரகடனம் செய்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளதென பிரகடனப்படுத்தப்படுவதோடு அல்லது, முறைப்பாட்டு மேல்முறையீட்டில் (ஆ) பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள, முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்ட இரண்டாவது வழக்கு சகுனம் மீது 2014, செத்தெம்பர் 24 ஆந் திகதிற்கு முன் வட்டி, உள்ளடங்களோடு ஏற்றமதி இருப்பான ரூபா. 1,275,592.22 பணத்தொகை மற்றும் 2014, செத்தெம்பர் 25 ஆந் திகதியில் இருந்து, மேற்குறித்த ஏற்றமதி இருப்பு முழுமையாக செலுத்துவதற்கு வருடத்திற்கு 24% வீதம் மேலதிக வட்டியோடு, எதிராளியின் மூலம் முறைப்பாட்டாளர் வங்கிக்கு செலுத்தவேண்டுமென, தீர்வுப்பிரகடனம் செய்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளதென பிரகடனப்படுத்துவதோடு அல்லது,

முறைப்பாட்டு மேல்முறையீட்டில் (இ) பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள, எதிராளி மூலம் முறைப்பாட்டாளருக்கு இந்த வழக்கு மதிப்பீட்டு, வழக்கு கட்டணம் செலுத்த வேண்டுமென தீர்வுப்பிரகடனம் செய்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளதென பிரகடனப்படுத்துவதோடு அல்லது,

என்னால் வழங்கப்பட்ட விற்பனை அதிகாரப்பத்திர அதிகாரத்தின்படி எதிராளிக்கு, கீழே குறிப்பிடப்பட்ட ஆதன இடாப்பில் விஸ்தரிக்கப்பட்டு காண்பிக்கப்பட்ட வழக்கை குறித்த அடகுவைக்கப்பட்ட காணி.

2023 ஆம் ஆண்டு யூலை மாதம் 27 ஆந் திகதி பி.ப.1.00 மணிக்கு மேற்குறித்த காணி அமைந்துள்ள இடத்திலேயே என்னால் பகிரங்க ஏலவிற்பனை மூலம் விற்பனை செய்யப்படும்.

*காணிக்கு பிரவேசிக்கும் வழி*: மஸ்கெலியா நகரத்தில் இருந்து அப்கோட் வீதி ஊடாக கவர்வில்லா பாடசாலை சந்தி வரை இல. 9/5 வரை போக்குவ வரை எட்டு கிலோமீற்றர் வரை பிரயாணம் செய்யும் பொழுது, அங்கிருந்து ஸ்டோக்ஹோம்வத்தை வீதியில் வலதுபக்கம் திரும்பி, கவர்வில்லா தமிழ் பாடசாலை வளாகம் வீதி வரை, 20 மீற்றர் வரை பிரயாணம் செய்யும் பொழுது, அங்கிருந்து கீறீன் லண்ட் பாம் வீதியில் இருந்து பிரவேசமுள்ள தேயிலை க்தரயே எல்லையாக பாடசாலை வளாகம் இருந்து 500 மீற்றர் வரை அங்கிருந்து அமைந்துள்ள குறித்த காணியை அடையும் பொழுது, பாடசாலை வீதி இடதுபக்கம் திரும்பி கிறீன் லண்ட் பாம் விடுதி பிரதேசம் வரை பாடசாலை வளாகம் திரும்பி, நேராக முன்நோக்கி பிரயாணிக்கவும்.

*கட்டணங்கள் செலுத்தும் விதம்*: உத்தேசக் கொள்வனவாளர் ஏல முடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்கு செலுத்த வேண்டும்.

1. கொள்வனவாளர் மூலம் விற்பனைத் தொகையில் விலையில் 25%. காணியை பெற்றுக்கொள்வோர் உடனாடியாக செலுத்தப்படுவதோடு, மிகுதி 75% பணத்தொகையை ஏல விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் வழங்கிற்கு வைப்பிலிட வேண்டும்.
2. சிவில் வழக்குக் கோவைச் சட்டத்தின் 258 உறுப்புரையின் கீழ், பெற்றுக்கொள்வோர் மூலம் கணக்கிற்கு முதலாவது ரூபா 7500.00 க்காக ரூபா 150.00 பணத்தொகையை ரூபா 7500.00 உடனடியாக ஒவ்வொரு ரூபா 1000.00 க்காக 5.00 வீதம் பிஸ்கால் கட்டணம் மற்றும் விற்பனைக்காக எல்லா செலவினங்களும் செலுத்தப்பட வேண்டும்.

## ஆதன இடாப்பு

மத்திய மாகாணம், நுவரெலியா மாவட்டம், உட புளத்கம பிரிவினுள் அம்பகமுவ கோரளை, அப்கோட் கிராமத்தில் அமைந்துள்ள ஆர். கனகரத்தினம் அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்டுள்ள இல. 6269 என்ற 1995.07.02 ஆந் திகதியுடைய வரைபடத்திட்டத்தில் காணியின் பகுதியான ( மேற்குறித்த காணி டி.எல்.டி.வை. விஜேவர்தன அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்டுள்ள இல. 1616 என்ற 1960.05.21 ஆந் திகதியுடைய வரைபடத்தில் துண்டு இல. 01 இல் பகுதியான, மேற்குறித்த கவர்வில்லாவத்தே பெகிரேவ் பகுதி 1A என அலகின் பகுதியாகும்.) ஆர். கனகரத்தினம் அவர்களால் அளந்து இல. 6399 என்ற 1995, நவெம்பர் 26 ஆந் திகதியுடைய வரைபடத்தில் நிருபிக்கப்பட்ட காணிப்பகுதி எல்லையாக- வடக்கு- கிழக்கு: ஆர். கனகரத்தினம் அவர்களின் இல. 6325 என்ற 1995.09.14 மற்றும் 15 என்ற வரைபடத்தின் லொட் 1A காணித்துண்டு ; தெற்கு- கிழக்கு: மேற்குறித்த இல. 6325 வரைபடத்தில் லொட் 3 என்ற காணித்துண்டு ; தெற்கு- மேற்கு: கவர்வில்லா வத்த; வடக்கு- மேற்கு: மேற்குறித்த காணியின் மிகுதிப்பகுதி மற்றும் எல்லையாக அமைந்துள்ள மேற்குறித்த இல. 6399 என்ற வரைபடத்தின்படி, விஸ்தீரணம் (0ஏ.0றூ.20பே.) அல்லது 0.0506 ஹெக்டயார். அதன் மீது அமைந்துள்ள அனைத்து சகலதும். இந்தக் காணி கம்பளை காணிப்பதிவு அலுவலகத்தில் B பிரிவில் 87/36 வெலியூம் /இருமடிப்புத்தாளில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மேற்குறித்த காணி சுமங்கலி சுப்ரமணியம் அதிகாரம் பெற்ற நில அளவையாளர் அவர்களால் மீண்டும் அளற்து கீழே விபரிக்கப்பட்டுள்ளது.

மத்திய மாகாணம், நுவரெலியா மாவட்டம், அம்பகமுவ பிரதேச சபை எல்லையினுள், அப்கோட் கிராமத்தில் அமைந்துள்ள சுமங்கலி சுப்ரமணியம் அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட 1627A/2011 என்ற 2011, மே 18 ஆந் திகதியுடைய வரைபடத்தில் நிரூபிக்கப்பட்ட லொட் 1 காணி (மேற்குறித்த காணி ஆர். கனகரத்தினம் அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்டுள்ள இல. 6399 என்ற 1995, நவெம்பர் 26 ஆந் திகதியுடைய வரைபடத்தில் நிரூபிக்கப்பட்ட காணிப்பகுதி மீண்டும் அளந்தவாறாகும்). களுக்காக எல்லையாக, வடக்கு- கிழக்கு: ஆர். கனகரத்தினம் அவர்களின் இல. 6325 என்ற 1995.09.14 மற்றும் 15 என்ற வரைபடத்தில் லொட் 1A என்ற காணித்துண்டு தெற்கு கிழக்கு மேற்குறித்த இல. 6325 வரைபடத்தில் லொட் 3 என்ற காணிப்பகுதி; தெற்கு - மேற்கு: கவர்வில்லா வத்த; வடக்கு- மேற்கு: மேற்குறித்த காணியின் மிகுதிப்பகுதி எல்லையாக அமைந்துள்ள மேற்குறித்த இல. 6399 என்ற வரைபடத்தின்படி விஸ்தீரணம்: (0ஏ.0றூ.20பே.) அல்லது 0.0506 ஹெக்டயார் மீது அமைந்துள்ள வரிமதிப்பீட்டு இல. 05 ,மஹ வீதி, அப்கோட் என்ற கட்டிடங்கள் மற்றும் அதன்மீதுள்ள அனைத்து சகலதும் உள்ளடங்களாகும்.

பதிவாளர்/உதவி பிசுக்கால் .

மாவட்ட நீதிமன்றம்,
ஹற்றன்.

06- 334

# நானாவித அறிவித்தல்கள்

## அறிவித்தல்

### குடியியல் நீதிமன்ற அதிகாரத்தை நடைமுறைப்படுத்தும் கொழும்பில் நடைபெறும் மேல் மாகாண மேல் நீதிமன்றத்தில்

*2007ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் XII ஆம் பிரிவின் ஒதுக்கீட்டின் படி மற்றும் அதன் கீழ், பேலியகொடை, புதிய நுகே வீதி, இல. 81/4 எனும் அமைவிடத்தில் அமைந்துள்ள தனது பதிவு செய்யப்பட்ட அலுவலகம் நடைபெறும் மக நெகும றோட் கன்ஸ்டக்ஷன் இன்வெஸ்ட்மன்ட் கம்பனி ( பிரைவேட்) லிமிடட் நீதிமன்றத்தினால் கணக்கு வழக்குகளை தீர்த்து கலைப்பு செய்வதற்கான வேண்டுகோள் தொடர்பான விடயம் தொடர்பானது.*

வழக்கு இலக்கம்: CH/32/2023/CO

*டூ கே கன்ஸ்ட்ரக்ஷன் ( பிரைவேட்) லிமிடட் , இல. 58/1, விஷாகா பிளேஸ், கம்பஹா.*

*மனுதாரர்*

*மேல் மாகாணத்தில், வாணிப மேல் நீதிமன்றத்தினால் மேற்படி பெயர் குறிப்பிடப்பட்ட கணக்கு வழக்கை தீர்த்து கலைப்பு செய்தவற்கான மனுவொன்று 2023 ஆம் ஆண்டு மே மாதம் 02 ஆந் திகதி குறித்த நீதிமன்றத்தில் மனுதாரருக்காக சட்டத்தரணி புனர்ஜி கருனாசேகர அவர்கள் சமர்ப்பித்துள்ளார் என்றும், குறித்த மனுதொடர்பில் விசாரணை 2023. 09.14 ஆந் திகதி நீதிமன்றத்தின் முன்னிலையில் விசாரணை செய்யப்படுவதற்கு நியமிக்கப்பட்டுள்ளது எனவும் குறித்த மனு தொடர்பான கட்டளையொன்றை புரிவதற்காக உதவுவதற்கு அல்லது அதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்காக விரும்பும் குறித்த நிறுவனத்தின் கடன்தருநர் அந்நபரின் விடயங்களுக்காக அதனை விசாரிக்கும் சந்தர்ப்பத்தில் தனிப்பட்ட முறையிலோ அல்லது தனது சட்டத்தரணி ஊடாகவோ தோன்ற முடியும் என்றும், மனுவின் பிரதியொன்று தேவையான குறித்த நிறுவனத்தின் எந்தவொரு கடன்தருநர் அல்லது உதவு தொகை செலுத்துநருக்கு உரிய கட்டணங்களைச் செலுத்தி கீழே ஒப்பமிடுபவரால் அது வழங்கப்படும் எனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*திரு. புனர்ஜி கருணாசேகர,*
*மனுதாரரின் பதிவுசெய்யப்பட்டசட்டத்தரணி ,*
*இல.03, அபோன்சு எவனியு, கொழும்பு-03.*

**குறிப்பு**: *அம்மனு சம்பந்தப்பட்ட விசாரணையின் போது சமுகமளிப்பதற்கு எண்ணுகின்ற எவரேனும் தன்னால் அவ்வாறு செய்வதற்கான தனது எண்ணத்தை மேலே பெயர் குறிப்பிடப்பட்ட சட்டத்தரணி திரு. புனர்ஜி கருணாசேகர அவர்களுக்கு எழுத்து மூலம் அறிவித்து கையளிக்க வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். அவ் அறிவித்தலில் அறிவிக்கும் நபரின் பெயர் மற்றும் முகவரியும், கம்பனி ஒன்றாயின் கம்பனியின் பெயர் மற்றும் முகவரி அறிவித்தலில் தெரிவிக்கப்பட வேண்டுமென்பதுடன், நபர் அல்லது கம்பனியால் அல்லது அவரது அல்லது அவர்களது ( சட்டத்தரணி ஒருவர் இருப்பாராயின் ) சட்டத்தரணியால் கையொப்பமிடப்பட வேண்டுமென்பதுடன், 2023.09.13 ஆந் திகதி பிற்பகல் 6.00 மணிக்கு முன்னதாக கையளிக்க வேண்டும்.*

*பதிவாளர்.*

வாணிப மேல் நீதிமன்றம்,
கொழும்பு,
*2023. 05.30.*

*06- 314*

## அறிவித்தல்

### குடியியல் (வணிக) நியாயாதிக்கத்தைக் கொண்ட மேல் மாகாண மேல் நீதிமன்றில் (கொழும்பில் அமையப்பெற்றுள்ளது)

இல. 148/1, கின்சி வீதி, கொழும்பு 08 இல் அமைந்துள்ள MIRIGAMA DENDRO POWER (PRIVATE) LIMITED விடயத்திலும்,

மற்றும்

ஒடுக்குவதற்கான விண்ணைப் இலக்கம் : 35/2023/CO

2007ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் XII ஆம் பகுதியின் கீழ் நீதிமன்றத்தினால் ஒடுக்குவதற்கான ஓர் விண்ணப்பம்.

டீ.எப்.சீ.சீ. வங்கி பீஎல்சீ, இல. 73/5, காலி வீதி, கொழும்பு -03

மனுதாரர்

மேற்கூறப்பட்ட கம்பனியை கொழும்பில் அமையப்பெற்ற மேல் மாகாண மேல் நீதிமன்றத்தினால் ஒடுக்குவதற்கான மனு 2023 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆந் திகதியன்று கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வங்கியால் குறித்த நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டதென அறிவித்தல் வழங்கப்படுகின்றது.

டீ.எப்.சீ.சீ. வங்கி பீஎல்சீ ,
இல. 73/5, காலி வீதி,
கொழும்பு-03.

குறித்த மனுவானது 2023 ஆம் ஆண்டு யூலை மாதம் 24 ஆந் திகதி குறித்த நீதிமன்றத்துக்கு முன் விசாரிக்க உத்தரவிடப்பட்டுள்ளதென்றும், மேற்குறித்த மனு சம்பந்தமாக மேற்குறித்த கம்பனிக்கு கடன் கொடுத்தவர் அல்லது பங்களிப்புச் செய்தவர் எவராவது குறித்த மனு தொடர்பில் கட்டளை பிறப்பிப்பதை ஆதரவு அல்லது எதிர்க்க விரும்புவராயின் விசாரணையின் போது நேரடியாகவோ அல்லது அவரது சட்டத்தரணி மூலமாகவோ அல்லது அக்காரணத்திற்காக பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணி மூலமாகவோ தோற்றலாம் எனவும் மேற்படி கம்பனிக்கு எந்தவொரு கடன்கொடுத்தவர் அல்லது பங்களிப்புச் செய்தவருக்குச் தேவைப்படின் மனுவின் ஒரு பிரதி அதற்கென அறவிடப்பட்டுள்ள கட்டணத்தை செலுத்தி கீழ் காட்டப்பட்டுள்ளவரின் கையொப்பமிட்டவரின் கையொப்பத்துடன் வழங்கப்படுமெனவும் அறிவிக்கப்படுகின்றது.

திரு. தேஜக்க பெரேரா,
மனுதாரரின் சட்டத்தரணி,
இல. 73, டபிள்யூ.ஏ.டீ. இராமநாயக்க மாவத்தை, கொழும்பு -02.

**குறிப்பு:** மேற்குறித்த மனுவின் விசாரணையின்போது நேரல் சமுகமளிக்க எவராவது நோக்கம் கொள்வதாயின் அவர்/அதன் நோக்கத்தை அறிவித்தல் மூலம் எழுத்தில் தெரிவித்து மேற்குறித்த சட்டத்தரணியான திரு. தேஜக்க பெரேரா அவர்களுக்கு நேரடியாக அல்லது பதிவுத்தபால் மூலம் சேர்ப்பிக்க வேண்டும். குறித்த அறிவித்தல் நபர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் அல்லது கம்பனியாக இருப்பின் கம்பனியின் பெயர் மற்றும் முகவரி அல்லது அவரின்/அதன் பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணி இருப்பின் பதிவுசெய்யப்பட்ட சட்டத்தரணியின் பெயர் என்பவற்றை குறித்து மேற்குறித்தவருக்கு நேரடியாக அல்லது தபால் மூலம் அனுப்பப்படுவதாயின் போதியகால அவகாசத்துடன் 2023 ஆம் ஆண்டு யூலை மாதம் 22 ஆந் திகதி பி.ப.ப 1.00 மணிக்குப் பிந்தாமல் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

திரு. தேஜக்க பேரேரா,
மனுதாரரின் சட்டத்தரணி.

06- 317

## சிறுவர்களுக்கான மஹாவிலச்சிய கல்வி நிலையத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

ஹேரத் முதியன்சேலகே சமன்பிரிய ஹேரத் ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு பாராளுமன்றத்தின் 53(1)ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் "சிறுவர்களுக்கான மஹாவிலச்சிய கல்வி நிலையத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்" எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகஞ்செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் சட்டமூலத்தின் நோக்கமானது பொதுக் குறிக்கோள்களை கொண்ட மேற்கூறிய மையத்தை கூட்டிணைப்பதாகும்.

(1) தொழில்வாய்ப்புக்களை ஏற்படுத்தும் தேவைகளையும் மற்றும் எதிர்கால இலக்குகளை அடையத் தேவையான திறன்களை அபிவிருத்தி செய்யும் கல்வி மையங்களை நடாத்துதல்;

(2) தகவல் தொழில்நுட்ப சேவைகளுக்கான தொழிற்பயிற்சி நிலையத்தினை நிறுவுதல்;

(3) பின்தங்கிய பகுதிகளிலுள்ள இளைஞர்களுக்கு தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகளை வழங்க ஏற்பாடு செய்தல்,

(4) திறன்கள் மற்றும் கற்றல் மேம்படுத்த உரிய நேரங்களில் தேவைப்படும் அனைத்தையும் திட்ட மிட்டு நடத்துதல்,

மற்றும் ,

ஹேரத் முதியன்சேலகே
சமன்பிரிய ஹேரத் ,
பாராளுமன்ற உறுப்பினர்.

06- 311

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.